DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No.1380/2025

PROSECUTION WITNESS L.W.11/P.W.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணன் | தகப்பனார் பெயர் | துரைப்பாண்டி |
| கிராமம் | | ஊர் | ஈரோடு |
| தொழில் | உதவி ஆய்வாளர் | வயது | |

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 07.05.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு வடக்கு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) வடக்கு காவல் நிலையத்தில் பணியாற்றிய தலைமை காவலர் நவனீதகிருஷ்ணன் மற்றும் உதவி ஆய்வாளர் லிங்கசாமி ஆகியோரின் கையொப்பம் எனக்கு பரீட்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியமளிக்கிறேன். கடந்த 30.07.2022 ம் தேதி, 09.00 மணிக்கு வடக்கு காவல்நிலைய தலைமை காவவர் நவனீதகிருஷ்ணன் என்பவர் நிலைய அலுவலில் இருந்த போது தெய்வமணி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று நிலைய குற்ற எண்.362/2022 சட்டபிரிவு 420 இதச r/w 5, 7(3) LR Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **(புகார் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலையும் அசல் புகாரையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் லிங்கசாமி அவர்களுக்கு அனுப்பி வைத்ததை அவர் எடுத்துக் கொண்டு, அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் சுப்பிரமணி, ஹரிஹரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.05.07 17:32:25 +0530

3) சாட்சிகள் தெய்வமணி, கோகுல்ராஜ், ஹரிஹரன், சுப்பிரமணி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை தேடியபோது, 30.07.2022 ம் தேதி 12.45 மணிக்கு கன்னிராவுத்தர் பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்த எதிரிகளை தகவலாளி அடையாளம் காட்ட அவரை பிடித்து விசாரிக்க தங்களது பெயர் ஐயப்பன் மற்றும் ஆசைத்தம்பி என்று பெயர் கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டவர்களை சாட்சிகள் மோகன், விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, எதிரி ஐயப்பன் எடுத்து ஆஜர் செய்த வெள்ளை பேப்பரில் பேனாவால் எழுதப்பட்ட வின்வின் 456371 முதல் 456390 வரையிலான 20 துண்டு சீட்டுகளை தனது சட்டை பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த லாட்டரி சீட்டுகளை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி, சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (வின்வின் 456371 முதல் 456390 வரையிலான 20 துண்டு சீட்டுகள் அ.சா.பொ. 1 முதல் அ.சா.பொ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4) பின் எதிரிகள் மற்றும் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **(படிவம் 91 அ.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னிட்டு இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மூன்றாவது எதிரியை தேடிய போது 08.08.2022 ம் தேதி வீரப்பன்சத்திரம் பஸ் நிலையத்தில் நின்று இருந்தவரை தகவலாளி அடையாளம் காட்ட பிடித்து விசாரித்து தனது பெயர் செந்தில் என்று கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டபிரிவு 420 இதச r/w 5, 7(3) LR Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொன்ன தேதி நேரத்தில் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளிடம் இருந்து தமிழக அரசால் தடை செய்யப்பட்ட அசல் லாட்டரி சீட்டுகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கை சரியாக விசாரிக்காமல் பொய்யாக எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.05.07 17:32:31 +0530

Judicial Magistrate No.I,
Erode.